சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 118/2010

DW 2 - ராமராஜ் 27.11.2024

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவாசொத்துக்கள் பூர்விக சொத்து என காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார், அவருடைய சகோதர, சகோதரிகள் குடும்ப ஏற்பாடு செய்துகொண்டதாக சொல்லியுள்ள நிலையில் குடும்ப ஏற்பாடு பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாரும், அவருடைய சகோதரர்களும் பாகம் பங்கி கொண்டபோது அவரது சகோதரிகளின் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டின்படி சகோதரிகள் பாகம் பங்க சம்மதித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாடு உண்மையாக இருந்திருந்தால் பாகபத்திரத்தில் சகோதரிகளின் கையெழுத்து பெறப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் தகப்பனார் இறந்தபின் வருவாய் ஆவணங்களில் எப்போது பெயர் மாற்றம் செய்தோம் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் தாயார் உயிருடன் இருந்த காலத்திலும் அவரது இறப்பிற்கு பின்னிட்டு வாதியும் தாவாசொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் சகோதரர் மயில்சாமி 10.06.1997 ம் தேதியில் எழுதிவைத்த உயில் பற்றி எனக்கு இடையில் தான் தெரியும். அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்களில் எப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

உயில் எங்குவைத்து எழுதினார், யார் முன்னிலையில் எழுதப்பட்டது, யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 10.06.1997 ம் தேதியிட்ட உயில் போலியானது என்றாலும், அது மயில்சாமியால் எழுதப்பட்டதல்ல என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி சின்னசாமி 27.12.2006-ம் தேதியில் எங்கு வைத்து யாருக்கு உயில் எழுதினார், யார் முன்னிலையில் எழுதினார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான், என் அப்பாவிற்கு எழுதிவைத்தார். 27.12.2006-ம் தேதியிட்ட உயில் போலியானது என்றால் சரியல்ல. உயில்படி எனக்கு சொத்து பாத்தியம் வரவில்லை என்றாலும், உயில் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவாசொத்துக்கள் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்பதால் வாதிக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் பாத்தியத்தை மறைத்து 01.10.1993 ல் என் தகப்பனாரும், அவரது சகோதரர்களும் செய்துகொண்ட பாகம் சட்டப்படியானதல்ல என்றாலும் அத சட்டபப்டி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாசொத்தில் 1/7 பங்கு உள்ளது என்றாலும், அதை வாதிக்கு பிரித்து கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவாசொத்துக்கள் ராமசாமிகவுண்டருக்கும் அவரது முன்னோர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவாசொத்தை பொறுத்து ராமசாமிகவுண்டர் பத்திரம் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். வாரிசின் அடிப்படையில்தான் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் சொத்து பாத்தியம் என்றால் சரிதான். என் தகப்பனாரும் அவரது சகோதரர்களும் 01.10.1993-ல் அவரது சகோதரிகளை விட்டுவிட்டு பாகம் பங்கிகொண்டார்கள் என்றால் சரியல்ல. சகோதரிகளை விட்டுவிட்டு எழுதப்பட்ட பாகபத்திரம் சட்டடப்டி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவாசொத்துக்களை நான் அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பெண்வாரிசுகளை

விட்டுவிட்டு எழுதிய பாகப்பத்திரம் நிபமமாக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மயில்சாமி 10.06.1997 ல் எழுதியதாக சொல்லப்படும் உயிலில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என் தகப்பனாரும் அவரது சகோதரர்களும் பெண்வாரிசுகளை விட்டுவிட்டு பாகம் பங்கிகொண்ட விபரம் மற்ற பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. 01.10.1993 ல் எழுதியதாக சொல்லபடும் உயிலில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். இரு உயில்களும் என்ன சூழ்நிலையில் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாகப்பத்திர ஆவணமே செல்லாத நிலையில் அதன் அடிப்படையில் எழுதியதாக சொல்லப்படும் உயில் செல்லதக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. 12 ம் பிரதிவாதியும் தாவாசொத்தின் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. 12 ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தில் உள்ள பங்கை பிரித்துகொடுக்க நான் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

**12 ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணை 3 ம் பிரதிவாதி தமதாக ஏற்றுக்கொண்டார்.**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி